## 21

### மளிகை

இது தமிழ்ச் சொல்லா? விளக்கித் தருக என ஓர் அன்பர் கேட்கின்றார். மலிகை என்ற தூய தமிழ்ச் சொல் மளிகை என்று மருவிற்று. ஆதலின் தமிழ்ச் சொல்லே. அன்றியும் ஒரு தமிழ்ச் சொல் சிறிது வேறுபாடுற மருவினாலும் அதன் தூய்மை கெடாது என்ற உண்மையை மனதிற் கொள்க. ஆகவே மளிகை என்பது தமிழ்ச் சொல், என்று மட்டும் சொல்லி அமையாமல், தூய தமிழ்ச் சொல் என்றே சொல்லுக.

மலிகை - நிறைதல். பெருகல் இத்தொழிற் பெயர் மலிதல் எனத் தல் இறுதிநிலை பெற்றுவரும்.

இனி மளிகை எனில் பல்பொருள் நிறைதல் என்க. மளிகைக் கடை எனின் பல்பொருள் நிறைந்த விற்பனை இல்லம்.

### பூ

பூ என்பது பூமி. உலகத்தைக் குறிக்கும் போது அது வடசொல் அல்லவா என்றார் ஷெ அன்பர். அன்று; அது தூய தமிழ்ச் சொல்லே.

'பூமேவு புல்லைப் பொருந்து குமரேசா' என்பதற்கு மலர் மேவிய சோலையுள்ள புல்வயல் என்ற ஊர் என்று ஒரு புலவர் பொருள் கூறியிருந்ததும் நம் நினைவிற்கு வருகின்றது. அது பிழை. பூமேவு - உலகில் அமைந்த என்று தான் பொருள் கூற வேண்டும்.

பூ எனினும் மலர் எனினும் உலகையே குறிக்கும் என்பது எதனாற் பெறப்படும் எனிற் கூறுவோம்:

இவ்வுலகுக்குத் தமிழர் கொடுத்த எண்ணூல் என்ற தத்துவ நூலில் (கபிலம். கபிலசாங்கியம்) ஆதி ஆகிய அதாவது முதன்மை (மூலப் பிரகிருதி)யை அரும்பு என்றும், தன் மலர்ச்சியை - மலரை இந்த உலகம், என்றும் சொல்லி வைத்தார் திருவாரூர்க் கபிலர். அன்று

தொடங்கியே பூ உலகுக்கு வழங்கலாயிற்று. வடவரும் அதை அப்படியே எடுத்தாண்டார்கள். எண்ணூலையும் வடமொழியில் பெயர்த்தார்கள் அன்றோ! திருக்குறளில் வரும் மலர்மிசை ஏகினான் என்பதில் வரும் மலருக்கும். உலகு என்றே பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு பொருள் கொள்ளத் தவறியதால் அதற்குப் பலவாறு பொருள் கூறியிருக்கிறார்கள் பலர்.

எனவே, பூ உலகைக் குறிக்கையிலும் அது தூய தமிழ்ச் சொல்லே என்க!

**- குயில், 21.10.1958**

## 22

## குடம்

இது தூய தமிழ்ச் சொல். இதையும் வடசொல் என்று ஆக்கிவிட எண்ணினர் வடவர். குடாகாயம் என்ற ஒரு தொடரைக் கட்டித் தத்துவ நூற்களில் விட்டிருந்தார்கள். சிவஞான போதத்திற்கு உரை எழுதவந்த சிவஞான யோகிகள் அங்கு இந்தக் குடாகாயத்தைக் கண்டாராதலின் அது பற்றிய புனைசுருட்டை விளக்க எண்ணினார். குடம் என்ற தமிழ்ச் சொல்லும், ஆகாயம் என்னும் வடசொல்லும் புணரவேண்டுமானால், குடவாகாயம் என்று புணர வேண்டும்; ஆதலால் யோகிகள் குடா காயம் என்று புணர்ந்துள்ள இது மரூஉ என்று கூறி, குளம் ஆம்பல் என்பன குளாம்பல் என்று புணர்ந்துள்ளதையும் எடுத்துக் காட்டினார். இதனால் வடவர், குடம் என்பதற்கு வடமொழிச் சட்டை போட்டதும், அது தமிழ்ச் சொல்தான் என்று சிவஞான யோகிகள் அந்தச் சட்டையைக் கிழித்தெறிந்ததும் உலக வெளிச்சமாகிவிடவே வடவருக்கு வந்தது எரிச்சல். சிவஞான யோகிகள் மேல் படைஎடுக்கவேண்டும்; நேரடி நடவடிக்கையில் நுழைவாரா வடவர். அதுதானே இல்லை! கோடரிக் காம்பொன்று தேடினார்கள், சிவஞான யோகிகளைத் தொலைக்க.

இதற்கு முன் வைத்தியநாத தேசிகர் என்ற ஒருவர் இலக்கண விளக்கம் என்பதொரு நூல் எழுதியிருந்தார். அந்நூல் வடமொழியி னின்றே தமிழ் வந்தது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. அதைச் சிவஞான யோகிகள் இலக்கண விளக்கச் சூறாவளி என்ற நூலின் வாயிலாக மறுத்துச் சிதறடித்தார்.

உள்ளதைச் சொன்னால் நொள்ளையனுக்கு நோக்காடுதானே? வைத்தியநாத தேசிகர்க்குச் சிவஞான யோகிகள் மேல் பகை உணர்ச்சி இருந்து கொண்டிருந்தது.

குடம் தமிழ்ச் சொல்லே என்று எடுத்துக்காட்டியதற்காக அச்சிவ ஞான யோகிகள் மேல் ஏவினார்கள் வடவர், கோடாரிக் காம்பாகிய வைத்தியநாத தேசிகரை.

எடுத்தார் தேசிகர் இறகை! குடம் என்பது வடசொல்லே! என்று - எழுதினார். இப்போது வண்ணாஸ்த்ரி தான் வண்ணாத்தி ஆயிற்று என்று தெ.பொ. மீ. சொன்னது போல.

சிவஞான யோகிகளின் உண்மைக் கருத்தைத் தேசிகரின் இந்த மறுப்பு அசைத்துவிடவில்லை. ஆயினும், தமிழர்களுக்கு அது தமிழ்ச் சொல்லே என்பதை நன்றாக விளக்கவேண்டுமே என்ற அருள் உள்ளத்தால், சிவஞான யோகிகளின் மாணவராகிய சபாபதி நாவலர் தாம் எழுதிய, திராவிடப் பிரகாசிகை வாயிலாக ஒரு விளக்கம் தரலானார். அது வருமாறு:

குடம் தமிழ்ச் சொல் ஆதல் குடந்தம்பட்டு, குடக்கூத்து, குடமுழா என்றற்றொடக்கத்தாற் பயின்றுவரும் தமிழ் வழக்குரைகளால் அறிக. இன்னும் குடம் தமிழ் இயற்சொல் என்பது குடந்தம்பட்டு எனவரும் திருமுருகாற்றுப்படைத் தொடர்க்கு - வழிபட்டு என்றும், வணக்கம் பட்டு என்றும் உரைப்பர் என்றும், 'குட' என்பது 'தட' என்பது போல வளைவு உணர்த்துவதோர் உரிச்சொல் ஆதலின் அதனடியிற் பிறந்த பெயருமாம் என்றும் நச்சினார்க்கினியர் உரை கூறுதலால் அறிக.

இதுவரைக்கும் கூறியவற்றால், சிவஞான யோகிகளும், நச்சினார்க்கினியரும், குடம் தமிழ்ச் சொல் என்பதையும், மேலும் காரணப் பெயர் என்பதையும் விளக்கியது அறிவிக்கப்பட்டது.

அதுபற்றி இன்னும் சில கூற விரும்புகின்றோம். தட என்பது வளைவுக்குப் பெயர்.

அவற்றுள், **'தட என்கிளவி கோட்டமும் செய்யும்'** என்றது காண்க.

அதுபோலவே 'குட' என்பதும் வளைவுக்குப் பெயர் என்க. வளைவு பெற்றுள்ள காரணத்தால் குடம் காரணப் பெயர். குடம் போல் அதாவது உடல் வளைந்து வணங்குதற்கும் குடந்தம் என்பர் தமிழ்ச் சான்றோர் என்பது காட்டப்பட்டது.

இனி, இவ்வாறு வளைவின் பெயரால் வணங்குதலைக் குறிப்பதென்பது தமிழ் நூற்களில் பெருவரவினதாகும்.

தோட்டி என்பது யானை செலுத்துவோன் வைத்திருக்கும் கருவி; அது வளைந்திருக்கும் என்பது யாவரும் அறிந்ததே. அதனால் வணங்குதலைத் தோட்டி என்ற பெயராலும் குறித்துள்ளார்கள் பழந்தமிழ்ச் சான்றோர்.

**"தோட்டியின் வணக்கம் வேட்டவன் விரும்பி"**

என்று (பெருங்கதை, 1-45-64) வந்துள்ளதை நோக்குக. இதனால் வளைவுள்ள தோட்டி போல் வணங்குதல் என்பது ஏற்பட்டது. இன்னும் தோட்டி என்றே வணங்குதலைச் சொன்னதுண்டோ எனின், கேட்க;

பதிற்றுப் ப்த்து 62-ஆம் பாட்டின் 10 ஆம்

**"தடக்கையர் தோட்டி செப்பி"**

என்று வந்துள்ளது. இதற்கு உரையாசிரியர், தோட்டி வளைந் திருத்தலின் வணக்கத்திற்குப் பெயராயிற்று என்றார்.

இந்நாளைய தமிழர்கள் 'குடம்' என்பதை வடசொல் என்று பிழையாக நம்புகிறார்கள் என்று எண்ணி, நாம் இவ்வாறு - அது தமிழ்ச் சொல் என்பதற்குக் காரணங்காட்ட முன் வந்தோம் இல்லை. வேறு எதற்குக் கூறினோம் என்பதை நோக்குக.

நம் தமிழ் அன்னை பகைவரால் பெருநாட்களாகவே எவ்வாறு அலக்கழிப்புக்கு ஆளாகி வருகின்றாள்! நோக்கு.

நம் தமிழன்னை பகைவரால் அலக்கழிக்கப்படுவது மட்டும் அன்றி, அப் பகைவர்களின் அடிவீழ்வாராகிய தமிழர்களால் எவ்வாறு அலக்கழிக்கப் படுகின்றாள்! நோக்குக.

பகைவர், நம் தமிழன்னையை ஒழித்துக் கட்டுவதில் எவ்வளவு பெருமுயற்சி கொள்ளுகின்றார்கள்? நோக்குக.

அந்தப் பகைவர்கட்குத் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ளும் அண்ணாத்துரைகள், மீனாக்கி அழகிகள், சேதுக்கள் எவ்வாறு ஒத்து வேலை செய்து வருகின்றார்கள். வந்துள்ளார்கள் நோக்குக!

**- குயில், 28.10.1958**

## 23

## வினயம்

இது தூய தமிழ்ச் சொல். வினையம் என்பதையே இவ்வாறு திரித்து ஆண்டனர் வடவர்.

வினை என்பது அதன் பயனுக்கு; வினையம் ஈறு திரிந்து ஆகுபெயர் ஆயிற்று.

வினை இரண்டு; நல்வினை, தீவினை, வினையம் இரண்டு; நல் வினையம், தீவினையம். ஆயினும் வினையம் என்பது, நல்வினையம் தீவினையம் என ஏற்றவாறு பொருள் கொள்ளவேண்டும்.

நல்வினையம் என்ற இடத்தில் வரும் வினையம் வணக்கம், அடக்கம், அறிவு, என்ற பொருள்களைத் தந்து நிற்கும்.

தீவினையம் என்ற இடத்தில் வரும் வினையம் அவற்றிற்கு மாறான பொருளைத் தந்து நிற்கும்!

ஆயினும் புராண காலப் புயலில் சிக்குண்ட புலவர்கள் நல்ல பொருளில் எடுத்தாளும்போது இச்சொல்லை வினயம் என்றும் தீய பொருளில் கையாளும்போது இச் சொல்லை வினையம் என்றும் குறிக்கலாயினர்.

அதனால் அண்மைக் காலத்து அகரவரிசை நூற்களில், வினையம் - வணக்கம், அடக்கம், அறிவு என்று பொருள் காட்டினர். வினையம் - தீய வினைப்பயன் என்று கொண்டனர் புலவர்.

கம்பராமாயணச் செய்யுள்:

**இளையநற் காதை முற்றும் எழுதினோர் வியந்தோர்கள்**
**அனையதுதன்னைச் சொல்வோர்க்கு அரும்பொருள் கொடுத்துக் கேட்டோர்**
**கனைகடற் புடவிமீதே காவலர்க்கு அரசாய் வாழ்ந்து**
**வினையம் அதுஅறுத்து மேலாம் விண்ணவன் பதத்திற்சேர்வார்.**

என்பதில் வினையம் காண்க.

எனவே வினயம் வினையமே தூய தமிழ்ச் சொல்லே.

## கவி

இது கபி என்பதின் சிதைவானால் குரங்கு என்று பொருள்படும். அப்போது அது வடசொல் என்றால் நாம் ஏற்றுக் கொள்ளத் தடையில்லை. பா என்னும் பொருளைத் தரும் போது அது (கவி) தூய தமிழ்ச் சொல்லேயாகும்.

கவிதல் என்பது தல் இறுதி நிலைபெற்ற தொழிற் பெயர். கவிகை என்னும் போது, அது கை இறுதி நிலை பெற்ற தொழிற் பெயர். கவிதை என்பதில் அதுபோலவே தை இறுதிநிலை என்க; நடத்தை என்பதிற் போல. எனவே கவிதல், கவிகை, கவிதை இத் தொழிற் பெயர்கள். கவி என முதனிலைத் தொழிற் பெயராக வருவது உண்டு. இது பெரு வழக்கும் ஆகும்.

இனிக் கவி என்றால் மனம் ஒரு பொருளில் கவிவது, பா என்க. கவி என்பது பாட்டுக்குத் தொழிலாகு பெயராயிற்று.

கவிதா என்கின்றார்களே வடவர் எனில், அது வடவர் இயல்பான சொல் என விடுக்க!

கவிஞனின் உள்ளத்தில் உருவான நிலையில் வைத்து அதைக் கவி என்றான் தமிழன். அது வெளிப்பட்டுப் பரவி நடக்கும் (பரவி) நிலையில் அதைப் பா என்றான்!

**கவிப்பா அமுதம் இசையின் கறியொடு கண்ணன் உண்ணக்**
**குவிப்பான் குருகைப் பிரான்சட கோபன் குமரி கொண்கன்**
**புவிப்பா வலர்தம் பிரான்திருவாய் மொழி பூசுரர்தம்**
**செவிப்பால் நுழைந்து புக்கு உள்ளத்திலே தின்று தித்திக்குமே.**

*- சடகோபர் அந்தாதி 7.*

என்றதில் நோக்குக.

இதில் கவி என்றது என்ன பொருளில் அமைந்தது! மனம் கவிதலால் உண்டான பா எனப் படவில்லையா? எனவே கவி தனியே நின்று ஆகுபெயராய்ப் பாவை உணர்த்துவதில் வியப்பென்ன?

கவி என்ற தூய தமிழ்ச் சொல்லும், அது பாவை உணர்த்த வேண்டியதற்கான தமிழ்ச் சட்டமும் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னரே நம்மிடம் உண்டு! ஆட்சியில் உண்டு! அது போல இதை

வடவர் 5000 ஆண்டுகளின் முன்னே ஏற்பட்டிருந்தால் அந்தக் காரணத்தைக் காட்டி இது வடசொல்லே தான் என்று மறுக்கட்டுமே! தமிழர் தம் தமிழ் உள்ளத்தை வடவரின் நச்சில் துவைத்துக் கொண்டு தமிழ்நாட்டில் தமிழில் உள்ள சொற்களிலெல்லாம் ஐயப்பாடுறுவானேன்? நாவலந்தீவு தமிழருடையது. அங்கு இயற்கை முறையில் முதற்காலத்திலே இருந்தது தமிழ்.

ஆரியர் வந்தவர். வந்தபின்தான் அவர்களின் மொழியைத் தமிழாற் பெருக்கினர். ஆரியர் வரும்போது அவர்கட்குச் சில சொற்களே தெரியும்! அவர்கட்கு நூற்களும் ஏற்பட்டன என்றால் தமிழாலேயே! சமஸ்கிருதம் என்பது சேர்த்துப் பொறுக்கிச் செம்மைப் படுத்தப்பட்ட ஒருகூட்டுக்கறி! தமிழ் அப்படியா? கருத வேண்டும். எனவே கவி தூய தமிழ்ச் சொல்லே என்று கடைபிடிக்க!

**- குயில், 4.11.1958**

## 24

### புருவம்

புரை, புரைவு, புரைவம் அனைத்தும் உயர்வின் பெயர். இஃது புருவம் என மருவிற்று. உயர் இடம், மேடு என்பன கொள்க. முகத்தில் குறிப்பிடத்தக்கதாகிய கண்ணுறுப்பினும் உயர்ந்திருப்பது என்ற காரணம் பற்றி வந்த பெயர்

"புணர்ப் புள்ளுறுத்த புரைபதம்"

*பெருங்கதை: இலாவண காண்டம்*

இதில் புரை உயர்வு குறித்ததைக் காண்க!

**"விரைவிரியார் புரைவுறப் புணர்த்த"**

*பெருங்கதை: உஞ்சை*

இதில் புரைவு, உயர்வு குறித்தது காண்க.

இனி, புரைவு அம்சாரியை பெற்றுவரும் மன்று மன்றம் என வந்தது போல். எனவே புரை, புரைவு, புரைவம் இவை உயர்ந்த இடத்துக்கு ஆம். போது ஆகுபெயர் எனப்படும்.

எனவே புருவம் தூய தமிழ்ச் சொல்லே எனக் கடைபிடிக்க.

### வாரி

கம்பராமாயணத்துக்கு உரை எழுத வந்த வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரி தமிழ்ச் சொற்களையெல்லாம் வேண்டுமென்றே வடசொற்கள் என்று காட்டி மகிழ்பவர். அதில் வாரி என்பதும் ஒன்று. பாலகாண்டம் ஆற்றுப்படலம் 3-ம் செய்யுள் உரையிலும் மேலும் பல இடங்களிலும் வாரி, இலக்கனையாய்க் கடலை குறித்தது. ஆதலின் அது வடசொல் என்று கூறியுள்ளார்.

வார் என்றாலே தமிழில் நீருக்குப் பெயர். நீண்டு ஓடுதல் என்ற காரணப் பொருளுடையது. அதுவே வார்தல் வார்ந்தது என்றெல்லாம் வினைப்பெயர் முதனிலையாய் வரும். எனவே வார் என்ற முதனிலை

தொழில் பெயருக்குப் பெருகுதல், ஒழுகுதல் என்ற பொருள் உண்டு. அந்த வார் என்பது வினைமுதற்பொருள். இறுதி நிலையாகிய இகரம் பெற்று வாரி என்றாயிற்று. வாரி என்பதற்கு நீர்ப்பெருக்கு, நீர் ஓட்டம், வெள்ளம் என்றெல்லாம் பொருள் பட்டுத் தமிழிலக்கியங்களில் வரும். இதுவே ஆகு பெயராய்க் கடலையும் உணர்த்தும், ஊர்வாரி நன்செய் எனப் பேச்சு வழக்கில் வருவதும் அனைவரும் அறிந்ததொன்றாம். எனவே வாரி என்பது தூய தமிழ்க் காரணப்பெயர் என்க. இனி,

## வாரிதி

வார் என்பது முதனிலை, தி தொழிற் பெயர் இறுதி நிலை. இகரம் சாரியை. ஆகவே வார்தி ஆயிற்று. இது தொழிலாகுபெயராய்க் கடலை உணர்த்தும். வாரிதி என்பதை வடமொழி என்பவர். தமிழினின்று அது எடுக்கப்பட்டது என்று உணர வேண்டும்.

வாரி என்பதற்குக் கூறியது கொண்டு வாரிதியும் தூய தமிழ்க் காரணப் பெயரே என்று கடைப்பிடிக்க.

## தாமரை

இதை தாமாசம் என்ற வடசொல்லின் சிதைவு என்று தமிழர்க்குக் கல்லாய் தைப்பர். மரு என்பது தமிழில் மணத்துக்குப் பெயர். அது ஐ என்ற பெயர் இறுதி பெற்று "முற்றும் அற்று ஒரோ வழி" என்ற சட்டத்தால் மரை என்றாயிற்று. இதுவும் முதலுக்கு ஆவதால் பண்பாகு பெயர் என்பர்.

இனி, மரை என்பது தாம்பு என்பதன் கடைக்குறையான தாம் என்பதை முன்னே பெற்றுத் தாமரை ஆனது.

எனவே (தாம்+மரை) தாமரை என்பது நீண்டதும் மணமுடையது மான ஓர் கொடியின் பெயரைக் குறித்த காரணப் பெயர்.

இது தாமரை மலரைக் குறிக்கும் போது முதலாகு பெயர் ஆம். இது செம்மை அடை பெற்றுச் செந்தாமரை என்றும், வெண்மை அடைபெற்று வெண்டாமரை என்று வரும்.

தாமரை தூய தமிழ்க் காரணப் பெயர் என அறிந்து உவக்க.

**- குயில், 11.11.1958**

## 25

### பஞ்சம்

பஞ்சின் தன்மை பஞ்சம் ஆயிற்று. ஈறுதிரிந்த ஓர் ஆகுபெயர் என்க.

பஞ்சின் தன்மையாவது: எளிமை, நிறை இல்லாமை, அதனடியாகப் பிறந்த பஞ்சம் என்பதும் எளிமை, நுகர்ச்சி இல்லாமை, பொருளில்லாமை எனப்பொருள்படும்.

இன்னும் பஞ்சு என்பது ஐ இறுதி பெற்று ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய மூன்று பாற்கும் வரும். அவன் பஞ்சை, அவள் பஞ்சை, அது பஞ்சை என.

அதுவே உயர்திணை அஃறிணையாகிய பலர் பாலுக்கும், பலவின் பாலுக்கும் அர், கள் பெற்று வரும்.

அவர் - பஞ்சையர், அவர்கள் - பஞ்சையர்கள், அவை- பஞ்சைகள், அவைகள் - பஞ்சைகள் என.

அவை - பஞ்சை எனினும் இழுக்காகாது.

பஞ்சம் என்பதைத் தமிழர் சிலர் வடசொல் என்று ஏமாறு கிறார்கள் என்பதறிந்து, ஐயம் நீக்குதற் பொருட்டே இவ்வாறு விளக்கப்பட்டது. பஞ்சம், பஞ்சை தூய தமிழ்ச் சொற்கள்!

### பனாதி

இது தமிழ்ச் சொல்லே. பன் + அத்து + இ = பன்னத்தி. அத்துச் சாரியை. 'இ' பெயர் இறுதி நிலை. பன் - ஒருவகைப் புல். அது பச்சென்றிருக்கை யிலும் கொளுத்தினால் காய்ந்தது போல் எரியும். பசையற்றது. பன்னத்தி என்பதே பனாதி என மருவிற்று. பனாதி- பசையற்றவன், வளமில்லாதவன்.

ஆதலின் அது தமிழ்ச் சொல்லாதல் பெறப்படும் என்க!

## வேந்தன்

அயோத்தியா காண்டம் நகர் நீங்கு படலம் 185-ம் செய்யுளின் விரிவுரையில் வை.மு.கோ. 'வேந்தன் தேவேந்திரன் என்பதன் சிதைவு என்பர்.' என்று எழுதியுள்ளார்.

"வேந்தன் மேய தீம் புனல் உலகமும்" எனத் தொல்காப்பியத் தில் வருகின்றதென்றால் தொல்காப்பியர் காலத்திலேயே தேவேந் திரன் என்பது வேந்தன் என்று சிதைந்துவிட்டதா? வை.மு.கோ. என்னு மிவரைப் போன்ற தீநெறியில் அஞ்சாதுகால் வைத்திருப்பாரா தொல்காப்பியர்!

தேவேந்திரன் என்பதே வேந்தன் என மாறிற்று என்பதை ஷ தொல்காப்பிய அடிக்குப் பொருள் கூறவந்த நச்சினார்க்கினியர் மனதில் கொண்டிருப்பார் எனில் வேந்தன் என்பதற்குத் தேவேந்திரன் என்றல்லவா உரை எழுதியிருப்பார் அப்படியும் இல்லையே.

பின் எந்த அடிப்படையில் இவ்வாறு வை.மு.கோ. கூறி யிருப்பார் எனில், தமிழர் ஏமாந்தவர்கள், என்று அவர் எண்ணிய எண்ணத்தின் அடிப்படையில்தான் என்று ஐயமின்றிச் சொல்லலாம்.

வேந்து தூயதமிழ்க் காரணப் பெயராதலைக் காட்டுவோம். வெம்மை என்ற பண்புப் பெயர் விருப்பம் என்ற பொருளுடையது. வேந்தன் என்பது வெம்மை என்ற பண்பின் அடியாய்ப் பிறந்த தாதலின் மக்களைக் காப்பதோர் விருப்பம் உடையவன் என்ற பொருள் பெற்றுச் சிறந்தது என்க.

வெம்மை என்ற பண்புப் பெயர் ஈறு போதலும் முதல் நீளலும் பெற்றுவேம் என நின்றுத் என்ற எழுத்தூப் பேறும் அன் ஆண்பால் இறுதி நிலையும் பெற்று வேந்தன் என்று ஆயது காண்க. வேந்தன் - அரசன் இதுவே இறுதிநிலை பெறாது வேந்து என நின்றக்கால் ஆட்சி நிலையைக் குறிக்கும். ஆதலின் வேந்தன் தூய. தமிழ்க் காரணப் பெயர் என்று கடைப்பிடிக்க.

## கராம்

முதலையின் பேராகிய கராம் என்பது வடசொல் என்றார் வை.மு.கோ. க்ராஹம் என்பதன் சிதைவாம். எல்லா உயிரையும் கொள்ளுவது என்பது பொருளாம்.

கரா என்ற (முதலையைக் குறிப்பது) தமிழ்ப் பெயர்ச்சொல் மகரமெய் பெற்று வருவதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு தொடங்குகிறார் தம் வேலைப்பாட்டை.

சட்ட என்பது சட்டம் என்று வந்தது இழி வழக்கு என்று விளக்கினார் சிவஞானபோத உரையாசிரியர். அவ்வாறு கரா என்பது மகர மெய் பெற்றதென அறிதல் வேண்டும். இவ்வாறு காரம் என்பது வடமொழி என்றார் எனில். ஒன்று அவர் ஏமாற்ற எண்ணுகிறார் என்று கொள்ள வேண்டும் அல்லது தெரியாமல் கூறுகின்றார் எனல் வேண்டும்.

அஃது கருமை என்றதனடியாகப் பிறந்த பெயர் ஆதலின் தமிழ்க் காரணப் பெயரேயாம். முதலை கருநிறமுடையதன்றோ!

## சுண்ணம்

இது சூர்ணம் என்ற வடசொல்லினின்று வந்ததாம். இவ்வாறு மேற்படியார் தாம் தமிழர்க்குக் கீழ்ப்படியாது கூறி வைத்தார் கம்பராமாயண உரைக்கிடையில்.

சுண்ணம் என்பது சுண்ணாம்பின் மரூஉ என நுணுகியறிதல் வேண்டும். சுள் என்பது வெப்பம். நாம்பு மெலிவு. வெப்பத்தால் மென்மை யடைந்தது அதாவது சுள்ளால் நாம்பியது சுண்ணாம்பு எனக் காரணப் பெயராகிய தூய தமிழ்ச்சொல். சுண்ணாம்பு என்பது சுண்ணம் என மருவிற்று என்பதைத் தமிழின் தொன்மையையும் அதன்மேல் எழுந்த தமிழிலக்கணத்தையும் ஆய்ந்தார் மறுக்க எண்ணார். அருமருந்தன்ன பிள்ளை என்பது அருமந்தபிள்ளை என வந்ததும் கண்டார் அன்றோ.

சுண்ணம் என்றசொல் நாளடைவில் பொடி - மணப்பொடி, முதலியவற்றிற்கும் வழங்கியது. எனவே சுண்ணம் தமிழ்ச் சொல்லே.

## ஆணை

இது ஆக்ஞா என்ற வடசொல்லின் சிதைவு என்று ஷெயார் ஷெ 142-ஆம் செய்யுள் விரிவுரையிற் கூறி இழுக்கினார்.

ஆக்ஞா என்பதைத் தமிழர் ஆக்கினை என்று சொல்லுவார்கள். அந்த ஆக்கினையின் மேல் வை.மு.கோ. படை எடுத்தால் செல்லும். ஆணை என்பதன் அருகில்கூட அவர் நெருங்கியிருக்கக்கூடாது.

முதற்கண் ஆண்மை என்ற பண்புப் பெயரின் பொருள் தெரிந்து கொள்ளவேண்டும்

"வலியும் வென்றியும் வாய்மையும் ஆண்மை"

என்பது பிங்கலந்தை

இப்பொருள் உள்ள ஆண்மை என்பது ஈறுபோய் முன்னின்ற மெய் திரிந்து ஐ வினை முதற்பொருள் இறுதிநிலை பெற்று ஆணையாயிற்று. பொருள்: வலியாதல், வென்றியாதல், வாய்மையாதல் என்பனவாம்.

ஆதலில் ஆணை தூய தமிழ்க் காரணப் பெயர் என்க.

இனி, நச்சினார்க்கினியர் ஆணை என்பது வடசொல் என்றே கொண்டாரே எனில் அவர் தமிழின் பகைவர் ஆதலினால் அவர் சொல் ஏற்கத்தக்கது அன்று என விடுக்க.

**- குயில், 18.11.1958**

## 26

## ஆய்தம்

தமிழரின் ஆய்தத்தை வடவர் பறித்துக்கொள்ளப் பெரிதும் முயன்றுள்ளனர். மு. இராகவையங்கார் இதை வடசொல்லாக்கத் தலைகீழ் நின்றார் என்பதை, அவர் எழுதி வெளியிட்ட ஆராய்ச்சித் தொகுதி கண்டார் அறிந்தாராவார்.

ஆய்தல் அகம், ஆயுதல் அகம், ஆயல் அகம், ஆய்தகம் என்பன அனைத்தும் பயிலிடத்துக்கு ஆன பெயர்கள். சிறப்பாக அது படைப்பயிற்சி செய்யுமிடத்துக்கு ஆம். இந்த ஆய்தகம் என்பது ஆய்தம் என ஈறு திரிந்த ஆகு பெயராய்ப் படைக்கு ஆயிற்று.

இனி ஆய்தம் என்பது (ஃ) ஆய்தவெழுத்துக்கும் ஆம். அப்படி ஆம்போது அது உவமை ஆகு பெயர் என்க.

ஆய்தம் என்பது (படை) தானேயன்றித் தான் மற்றொன்றை - தன்னை எடுத்தாள்வோனைச் சார்ந்து பயன்படுவது.

ஆய்த எழுத்தும் வல்லெழுத்தைச் சார்ந்து பயன்படுவது. ஆய்த எழுத்து - சார்பெழுத்துக்களில் ஒன்று.

> "சார்ந்துவரின் அல்லது தமக்கியல் பிலஎனத்
> தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்
> தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி
> ஒத்த காட்சியின் தம்மியல் பியலும்."

என்னும் தொல்காப்பிய நூற்பாவை நோக்குக.

எனவே ஆய்தம் வடமொழியன்று. தூய தமிழ்ச்சொல்.

- குயில், 25.11.1958

## 27

### சிங்கம்

இது ஹிம்ஸ என்ற வடசொல்லின் சிதைவாம். ஹிம்ஸ என்பது சிம்ஹ என்றாகிப் பின் சிங்கம் என்று ஆயிற்றாம். இவ்வாறு வடவர் கூறுவதோடு தமிழ்ப் புலவர் சிலரும் கூறுகின்றார்கள்.

சிலப்பதிகார பதிகம் 47-ம் அடியில்

**"சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்து"**

என்றதை உற்று நோக்குவார்க்கு உண்மைப் புலப்படாமற் போகாது.

இது மட்டுமல்ல; கம்பராமாயணம் நாடுவிட்ட படலம் 40-ம் செய்யுளாகிய

**"சிங்கல் இல் கூதாலி"**

என்பதையும் நோக்குக. தமிழ்ச் செய்யுள்களில் பல இடங்களில் இவ்வாறு வந்துள்ளதென்பது தமிழறிந்தார் அறியாததன்று.

சிங்கல் - கெடுதல் என்பது பொருள்.

எனவே பிற உயிர்கட்குக் கேடு சூழ்வது அதனால் தானும் கெடுவது சிங்கம் என்றாயிற்று. உயிர் நூற் புலவரும், சிங்கம் இந்நாட்டிலும் பிற நாட்டிலும் இல்லாது குறைந்து வருவதற்குக் காரணம் பிற உயிரை அரிப்பதுதான் என்று கூறுவார்கள். சிங்கத்துக்கு அரிமா எனவும் பெயருண்டு. சிங்கல் சிங்கத்திற்கு ஆனது ஆகுபெயர்.

எனவே சிங்கம் தூய தமிழ்ச் சொல்லே என்க.

### வரம்

வரல் என்பது ஈறுதிரிந்த தொழிற்பெயராய் வருதலுற்ற பொருளைக் குறிக்கும். இந்த வரல் என்பது வரத்து என்றும் வழங்கும். அதனாலன்றோ கம்பராமாயணம் ஆரணிய காண்டம், விராதன் வதைப்படலம் 22-ம் செய்யுளில்

வரத்தின் - வருதலினால் என்று பொருள் கொண்டதும் என்க.

எனவே வரம் என்பது தூய தமிழ்ச் சொல்லே என்று கடைப் பிடிக்க.

- குயில், **2.12.1958**

## 28

## பகுதி

இஃது பகுரிதி என்ற வடசொல்லின் சிதைவென்று வை.மு. கோபாலகிருட்டிணமாச்சாரி முதலிய பார்ப்பனர் எழுதியுள்ளார்கள். இது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பானின் செய்கையை ஒப்ப தாகும். பகு என்ற முதனிலை அல் இறுதிநிலை பெற்றுப் பகல் என்று வரும். அப்பகல் என்பது வேறுபாட்டால் பால் எனவும் வரும். "பால்வரு பனுவலின்" (கம்ப.யுத்த. விபீ.78) என்பதிற்போல, அப்பகு என்பதே அகரச் சாரியையும், வு இறுதிநிலையும் பெற்றுப் பகவு என வரும். அதுவே பு இறுதிநிலை பெற்றும், தல் இறுதி நிலை பெற்றும், தி இறுதி நிலை பெற்றும் பகுப்பு, பகுதல், பகுதி எனவும் வரும். பகுதி முதலியவாக இங்குக்காட்டப்பட்ட அனைத்துக்கும் பிரிவு என்பதே பொருள்.

எனவே பகுதி என்பது தூய தமிழ்ச் சொல்லாதல் வெளிப்படை. இவ்வாறுள்ள தமிழ்ச் சொற்களையும் வட சொல் என்று கூறும் வடவர் எண்ணம் நாம் அறிந்ததேயாகும். தமிழையே வடமொழிச் சேற்றில் புதைத்து அதன் வாயிலாகத் தமிழரை ஒழித்துக் கட்டுவதே அவர் எண்ணம் என்பது தெளிவு.

அவர்களின் இந்தத் தீய - கொடிய முயற்சியானது அவர்கட்குப் பயனளித்தே வந்துள்ளது. வண்ணாஸ்த்ரீ என்பது தான் வண்ணாத்தி என்றாயிற்று எனக் கூவுகின்ற மடையர்களையும் அவர்கள் உண்டாக்கிவிடவில்லையா?

### கடிகை

கடிகா என்ற வடசொல்லினின்று கடிகை வந்தது என்று கூறி இழுக்குவார்கள் வடவர்.

கடி என்பது கடிகை எனத் திரிந்தது.

கடி என் கிளவி விரைவை உணர்த்தும். அது நாட் காலத்தினும் விரைந்து தீர்வது என்ற பொருளில் அமைந்துள்ளது. இதனையும்

**"கடிகைக் கிளவி நாழிகை கபாடத்திருதாள்**
**கண்டமும் துண்டமும் இசைக்கும்"**

என்ற பிங்கலந்தை நூற்பாவையும் நோக்குக. கடிகை என்பது நாட்காலத்தின் நுண் பகுதிக்கும் ஆகும் என்பதை இதனின்று அறியலாம். இனி, கடி என்பது கடிகை எனத் திரிதலுண்டா என்பார்க்கு தொல் 383-ம் நூற்பாவின் உரையே பதில் கூறும்.

எனவே கடிகை என்பது தூய தமிழ்ச் சொல்லே எனக் கடைபிடிக்க.

**- குயில், 9.12.1958**

## 29

### பிச்சை

இது பிக்ஷா என்ற வடசொற் சிதைவென்று பார்ப்பனர் எழுதியும் பேசியும் வருகின்றார்கள்!

பித்தை - ஊண்நிலையில் ஏற்பட்ட தவறுதலையும், மனநிலையில் ஏற்பட்ட தவறுதலையும் குறிப்பது.

பித்தை என்பது பிச்சை ஆனது போலி.

ஆதலின் பிச்சை என்பது வந்தவர் மொழியன்று.

### தச்சன்

இது தக்ஷன் என்ற வடசொல்லின் சிதைவென்று கம்பர் மாரீசன் வதைப்படலம் 2-ம் பாட்டின் விரிவுரையில் விரிக்கின்றார் வை.மு.கோ.

தைத்து முதனிலைத் தொழிற்பெயர். அது தச்சு என்று ஆன போது, அன் ஆண்பால் இறுதிநிலை பெற்றுத் தச்சன் ஆனது.

இனித் தச்சு = தைத்து - என்பது ஒன்று சேர்த்தல், பொருத்தல் என்னும் பொருளுடையது. ஓர் உருவின் பல்லுறுப்புக்களையும் சேர்ப்பது பொருத்துவது என்ற காரணத்தால் அப்பெயர் வந்தது. இதை வடசொல்லார் சிற்பம் என்பார்.

எனவே தச்சு, தச்சன் செந்தமிழ்ச் செல்வங்களே எனக் கடைப்பிடிக்க.

### பாக்கியம்

இது வடசொல் அன்று! வடசொல் அன்று!!

பயன்கொழிக்கும் நெய்தனிலத்தூரையும், பயன்கொழிக்கும் மருத நிலத்தூரையும் பாக்கம் என்னும் தமிழ்நூல். பாக்கம் என்பது அங்குத் தோன்றும் செல்வத்துக்கு ஆனது இடவாகு பெயர். பாக்கம்,

பாக்கியம் ஆனது. திரிதல்: ஓவம், ஓவியம் என்று திரிந்ததைப் போல. இனிப் பாக்கம் இடையில் இகரச் சாரியை பெற்றது ஆகு பெயர்க்குறி எனவும் ஆம்.

செல்வம், பேறு முதலியவற்றைக் குறிக்கும் பாக்கியம் என்பது தூய தமிழ்க் காரணப் பெயர் என்று நினைவிற்கொள்க!

**- குயில், 16.12.1958**

# 30

## கோட்டி

இதைக் கோஷ்டி என்ற வடசொற் சிதைவென்று தமிழர் பலர் எண்ணுவதாய்த் தெரிகின்றது. இது நேர்மாறான எண்ணம். கோட்டி என்ற தூய தமிழ்க் காரணப் பெயரை, வடசொற்காரர் கோஷ்டி என்று சொல்லி வருகின்றார்கள். வேட்டி, முட்டி என்ற தமிழ்ச் சொற்களை வேஷ்டி, முஷ்டி என்று சொல்லிக் கொள்வதுபோல.

கோள் - கொள்கை: த் எழுத்துப் பேறும் இ வினை முதற்பொருள் இறுதி நிலையும் பெற்றுக் கோட்டி என முடிந்தது. கொள்கை உடையது, என்பதால் காரணப் பெயர். ஒரு கோட்பாட்டைக் கொண்ட கூட்டத்தைக் குறிப்பது. நாளடை வில் பொதுவாகக் கூட்டத்தையும் குறிப்பதாயிற்று.

## கருப்பம்

இது கர்ப்பம் என்ற வட சொல்லின் சிதைவென்பார் வடசொல் வெறியர்.

கரு, கருப்பம், கார் என்பன கருமை எனப் பண்புப் பெயரடியாய் வந்தவை; காரணம் என்பது பொருள். கருப்பம் என்பது மை ஒழிந்த கரு, பம் என்ற பண்புப் பெயர் இறுதிநிலை பெற்றது. நன்மை என்பது நலம் ஆனது காண்க. கார் என்பது தனியாய் நின்று காரணப் பொருள் தருவதில்லை. காரணம் என்பதில் முதனிலையாய் நின்று அப் பொருளைத் தரும்.

- **குயில், 23.12.1958**